# 1751(N)

பதிவு எண் | | | | | | |

## தமிழ் - முதல் தாள்

## Language – Part A – TAMIL – Paper I

( செய்யுள், உரைநடை )

**( NEW SYLLABUS )**

www.rktuitioncentre.blogspot.in

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*அறிவுரை* : அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

*குறிப்பு* : i) இவ்வினாத்தாள் ஐந்து பிரிவுகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

### பிரிவு - I

( மதிப்பெண்கள் : 20 )

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : $6 \times 1 = 6$

1. 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' எனப் பாடியவர்

அ) பாரதிதாசன்

ஆ) கவிமணி

இ) பாரதியார்.

2. தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்

நேசமுற விண்ணப்பம் செய அவரும் அது நேர்ந்தார் - இப்பாடலடிகளில் அமைந்த தொடை

அ) மோனை

ஆ) எதுகை

இ) இயைபு.

[ திருப்புக

www.rktuitioncentre.blogspot.in



3. சரசுவதி அந்தாதி .................. இயற்றிய நூல்களுள் ஒன்று.

அ) கம்பர்

ஆ) ஒட்டக்கூத்தர்

இ) புகழேந்தி.

4. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது

அ) பாரத ரத்னா

ஆ) பத்ம விபூஷண்

இ) பத்ம ஸ்ரீ.

5. பகைவனிடமும் அன்பு காட்டு எனக் கூறிய நூல்

அ) நன்னூல்

ஆ) பகவத்கீதை

இ) பைபிள்.

6. இன்றைய மதுரையில் .................. தமிழ்ச்சங்கம் இருந்தது.

அ) மூன்றாம்

ஆ) இரண்டாம்

இ) முதலாம்.

## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக : 6 × 1 = 6

7. பாரதிதாசனார் .................. என்று அழைக்கப்படுகிறார்.

8. புறநானூறு .................. நூல்களுள் ஒன்று.

9. மனம், புத்தி, சித்தி .................. என்பன நாற்கரணங்கள்.

10. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் .................. .

11. திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் .................. என்னும் பொருளால் ஆனது .

12. பெரியார் சமூக .................. எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை .................. .

www.rktuitioncentre.blogspot.in


## பகுதி - 3

பொருத்துக : 4 × 1 = 4

13. சாலை இளந்திரையன் — கலித்தொகை

14. திருநாவுக்கரசர் — சீறாப்புராணம்

15. நல்லந்துவனார் — பூத்தது மானிடம்

16. உமறுப் புலவர் — தேவாரம்

## பகுதி - 4

விடைக்கேற்ற வினா அமைக்க : 4 × 1 = 4

17. தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.

18. வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.

19. இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.

20. அறிவு அற்றம் காக்கும் கருவி என்றார் திருவள்ளுவர்.

## பிரிவு - II

( மதிப்பெண்கள் : 20 )

## பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 5 × 2 = 10

21. கொக்கைச் சான்று காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது ?

22. ஏலாதி என்னும் மருந்து எப்பொருள்களால் ஆனது ?

23. 'பண்ணவன் வருக என்னப் பரிவினன் விரைவில் புக்கான்' - பண்ணவன் யார் ? பரிவினன் யார் ?

[ திருப்புக

www.rktuitioncentre.blogspot.in



24. அப்பூதியடிகள் எவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார் ?

25. வயலின் வரப்புகளாகக் கூறப்படுவன யாவை ?

26. வேந்தற்குரிய பொருள்கள் யாவை ?

27. கலித்தொகை கூறும் அன்பு, அறிவு ஆகியன பற்றி கூறுக.

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 5 × 2 = 10

28. தொல்காப்பியம் குறித்து டாக்டர் எமினோ கூறுவது யாது ?

29. திரைப்படச்சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை ?

30. ஞாலம் - பெயர்க்காரணம் கூறுக.

31. பண்டைத் தமிழர் எவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர் ?

32. காந்தியடிகள் இராமனைப் போற்றக் காரணம் யாது ?

33. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை ?

34. வள்ளலாருக்கும், பாரி வள்ளலுக்கும் உள்ள ஒற்றுமை யாது ?

## பிரிவு - III

( மதிப்பெண்கள் : 24 )

## பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3 × 4 = 12

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழ மன்னர்களின் சிறப்புகள் யாவை ?

36 'மென்கண், செல்வம் செல்வமென்பதுவே' - இவ்வடி குறித்து நற்றிணை கூறுவது யாது ?

37 சாதனைப் பூக்கள் என்று எவற்றைச் சாலையார் சுட்டுகிறார் ?

38 விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை ?

39 புலியின் தோற்றம் பற்றி எழுதுக.

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3 × 4 = 12

40. மணக்கொடை குறித்து பெரியார் கூறுவன யாவை ?

41. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும் ?

42. பண்டைத் தமிழரின் நாகரிகமும் பண்பாடும் குறித்து எழுதுக.

43. இன்னா செய்யாமை - காந்தியத்திலிருந்து ஒரு சான்று தருக.

44. அம்பேத்கார் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை ?

## பிரிவு - IV

( மதிப்பெண்கள் : 10 )

45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க :

பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு
    பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு
    காவிரி வளநாடா
நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
    இவையிவை யுடைநந்தி
மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
    வானகம் ஆள்வாரே.

6 = 10

i) இக்கலம்பகம் யார் மீது பாடப்பெற்றது ?

ii) முத்துகளைச் சொரிகின்றவை எவை ?

iii) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.

iv) கவிகை - என்பதன் பொருள் யாது ?

v) வருபுனல், பொழிதருமணி - இலக்கணக் குறிப்பு தருக.

www.rktuitioncentre.blogspot.in

www.rktuitioncentre.blogspot.in



46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

காந்தியடிகள் தமிழ்நாட்டுக்கு வந்தபோது, ஏழை உழவர்கள் வறுமையால் அரையாடை உடுத்தியதைக் கண்டார். தாமும் அன்று முதல் மேலாடை அணிவதை நிறுத்திக் கொண்டார். அரையாடையுடன் இங்கிலாந்தில் நடந்த வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற போது, அப்போதைய இங்கிலாந்து முதன்மையமைச்சர் சர்ச்சில் அரை நிர்வாணப் பக்கிரி என்று ஏளனம் செய்த போதும் காந்தியடிகளின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

காந்தி, காசி இந்துப் பல்கலைக்கழகத்தின் திறப்பு விழாவிற்கு வந்திருந்த மன்னர்களையும், செல்வர்களையும் பார்த்துக் 'கோடானுகோடி மக்கள் உண்ணக் கஞ்சியும், உடுக்கத் ந்தையும் இல்லாமல் தவிக்கும் இந்த நாட்டில் இன்னும் உங்களில் பலர் காடிக்கணக்கான விலை மதிப்புள்ள அணிகலன்களை அணிந்து கொண்டு பகட்டாக ாழ்வது பாவமல்லவா ? என்று கேட்டார். ஏழைகளின்பால் கொண்ட அவரின் பரிவு பாற்றற்குரியதாகும்.

i) காந்தியடிகள் மேலாடை அணிவதை நிறுத்தியதன் காரணம் என்ன ?

ii) அரை நிர்வாணப் பக்கிரி என்று ஏளனம் செய்தவர் யார் ?

iii) இந்துப் பல்கலைக்கழகம் எங்குள்ளது ?

iv) கந்தை, பகட்டு - பொருள் கூறுக.

v) இவ்வுரைப் பகுதிக்கு ஏற்ற தலைப்புத் தருக.

## பிரிவு - V

( மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 2 × 8 = 16

47. அ) கண்ணகிக்கும் பாண்டிய மன்னனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.

*அல்லது*

ஆ) வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் கலித்தொகைப் பாடல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

48. அ) பெண்ணுரிமைக்கான வழிமுறைகளைப் பெரியார் வழிநின்று விளக்குக.

*அல்லது*

ஆ) தொழிற்கல்வி - தொழில் நுட்பக்கல்வி குறித்து விரிவாக எழுதுக.

### பகுதி - 2

49. செய்யுள் வடிவில் விடை தருக : 2 + 2 + 6 = 10

அ) காலம் கருதி ..... எனத் தொடங்கும் குறள்

ஆ) கெடும் என முடியும் குறள்

இ) மெய்தான் அரும்பி ......... எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடல்.

www.rktuitioncentre.blogspot.in